2020 ஜனவரி 9] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தள்ளிவைத்து, 2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் இன்று முன்மொழியப்பெற்று வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இரண்டாவது), *2019–2020*, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Article *205*, read with Clause *(3)* of Article *203*, of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation, for moving, in the Tamil Nadu Legislative Assembly, the Demands for Further Grants for the year *2019–2020*."

10. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இரண்டாவது), 2019–2020, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*